1974 மார்ச் 9]

திரு. க. உரோ. எட்மண்ட்: இந்தத் திட்டத்தை ஆரம்பிப் பதற்கு ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் வந்து அடிக்கல் நாட்டினார்கள். ஆயுள் காப்புக் கழகத்திலிருந்து எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆயுள் காப்புக் கழகம் இதற்கான கடனில் பெரும்பகுதியைத் தர இசைந்திருக்கிறது. அந்த அடிப்படையில் பல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் காயல்பட்டினம் பேரூராட்சி மன்றம் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடனைத் திரும்பத் தரவில்லை என்ற அடிப்படையில் அதைப் பற்றிய முக்கியமான குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. அரசுக்கும் அந்தப் பேரூராட்சிக்கும் இடையிலுள்ள அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன்—தீர்ந்திருக்குமென்று நம்புகிறேன்— வேலை துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

துலையாநத்தம் நலத்துறைப் பள்ளி

***338 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம் துலையாநத்தம் கிராமத்திலுள்ள அரிசன நலப்பள்ளியை உயர் துவக்கப்பள்ளியாக மாற்ற வேண்டும் என ஊர் பொதுமக்கள் சார்பாக கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் துலையாநத்தம் அரிசன நல உயர் துவக்கப்பள்ளியை அரிசன நல உயர்நிலைப்பள்ளியாக மாற்றக் கோரி ஊர் பொது மக்கள் சார்பாக மனு பெறப்பட்டது. அது குறித்து அரிசன நல இயக்குநர் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த மனு எப்போது வந்தது? இவ்வளவு காலதாமதமாவதற்கு என்ன காரணம்? துவக்கப் பள்ளியை உயர் துவக்கப் பள்ளியாக மாற்ற ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 12—10—1969-ல் இந்த மனு வந்தது. தனியாக அரிசன மக்களுக்கு இப்படிப்பட்ட பள்ளிகளை ஊக்குவிக்கலாமா என்ற கேள்வி அரசின் பரிசீலனையில் இருக்கும் காரணத்தால் தாமதமாகிறது. இருந்தாலும் இயக்குநர் அவர்கள் நான்கு பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவை பற்றி ஒன்றாகச் சேர்த்து முடிவு எடுக்கப்படும்.

திரு. சி. க. வடிவேலு : இந்தப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதால் அதை வெகு விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விரைவில் எடுக்க முயற்சிக்கும்.

திரு. வீ. இராசகோபால் : அரக்கோணத்தில் ஹரிஜன நலத் துறையினரால் இயங்கி வருகிற நடுநிலைப் பள்ளியில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அதை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : ஹரிஜன நலத் துறையால் புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் தொடங்குவதற்குப் பதிலாக தரமான உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்ற இடங்களில் ஹரிஜன மாணவர்கள் விடுதிகள் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விடுதிகள் அமைக்கிற கொள்கை இப்போதும் இருக்கிறது. கேள்வி தலையாநத்தம் நலத் துறைப் பள்ளியை உயர் துவக்கப் பள்ளியாக மாற்றுவது பற்றியது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துவக்கப் பள்ளிகளை உயர் துவக்கப் பள்ளிகளாக மாற்றுவதற்கு விதிமுறைகள் ஏதாவது அரிசன நல இலாகாவில் வகுக்கப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டேன், அதற்குப் பதில் இல்லை. அதுகுறித்து விதிமுறைகள் இருந்தால் அதன் விவரங்களை அறியலாமா?

1974 மார்ச் 9]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: உயர்நிலைப் பள்ளி களாக மாற்றுவது பற்றித்தான் இப்போது அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. உயர் துவக்கப்பள்ளி பற்றியதல்ல.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: 1969-ல் இதை ஹையர் எலிமென்டரி ஸ்கூலாக மாற்ற வேண்டுமென்று விண்ணப்பித்து ஐந்தாண்டுகள் ஆகியும்கூட அதுபற்றி அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? இவ்வளவு தாமதம் தேவையா இதற்கு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பொதுமக்கள் அனுப்பிய கோரிக்கைகளை மாவட்ட நல அதிகாரிகளும், மாவட்ட ஆட்சியாளர் அவர்களும் விசாரணை செய்து இயக்குனருக்கு அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் 1972-73-ல்தான் இது அவசியம் என்பதை அறிந்து மேலும் நான்கு உயர் துவக்கப் பள்ளிகளை அப்படி மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டு அரசுக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இடையில் அரசாங்கம் இப்படி ஒரு கொள்கையை எடுத்துக்கொள்ளலாமா, ஹரிஜனப் பள்ளிகளை மேலும் ஹரிஜனப் பள்ளிகளாக வைத்திருக்கலாமா அல்லது கல்வித் துறை நடத்தும் பள்ளிகளோடு சேர்த்து ஊக்குவிக்கலாமா என்று ஒரு யோசனை இருந்து கொண்டு வருகிற காரணத்தால் இதில் இன்னும் முடிவு எடுக்கவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று ஹரி ஜனங்கள் பெயரால் ஒரு போர்ட் அமைக்க இருக்கிற அரசாங்கம் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அதைத் தவிர்க்கவேண்டும் என்ற நல்ல மனப்பான்மை இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. மற்ற மாணவர்களை அந்தப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனியாக அவர் களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்ற நல்ல கொள் கையை மாநில அரசு கடைப்பிடித்து அதற்கான திட்டத்தினை

உருவாக்கியிருக்கிறது. ஆனால் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் மத்திய அரசு அடிக்கடி ஹரிஜன மாணவர்களுக்கு என்று தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடாது என்று வற்புறுத்தி வருகிறார்கள். அதற்காகத்தான் அது தாமதப்பட்டுக் கொண்டு வருகிறது.

அரிசனக் குழந்தைகளுக்கு மதிய உணவு

*339 வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், கயத்தார் பஞ்சாயத்து யூனியன், பரசுராமபுரம் ஆரம்பப்பள்ளியில் 90 சதவிகிதத்துக்கு மேல் படிக்கும் அரிசனக் குழந்தைகளுக்கு அரிசன நல இலாகா மூலம் மதிய உணவு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) எழுபது சதவிகிதத்திற்கு மேல் அரிசனப் பிள்ளைகள் படிக்கும் அரிசன நலம் அல்லாத 302 பள்ளிக்கூடங்களில் அரிசன நல நிதியிலிருந்து மதிய உணவு வழங்குவதற்கு என ஒரு செயற்குறிப்பை அரிசன நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இத்திட்டத்தில் பரசுராமபுரம் ஆரம்பப்பள்ளிக்கூடமும் சேர்ந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: இந்தப் பள்ளிக்கூடத்தைப் பொறுத்த வரையில் 100-க்கு 100 ஹரிஜனக் குழந்தைகள்தான், வேறு ஜாதிக் குழந்தைகள் அந்தப் பள்ளிக் கூடத்தில் கிடையாது. 70 சதவிகிதத்திற்கு மேல் ஹரிஜனப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கும்போது நூற்றுக்கு நூறு ஹரிஜனப் பிள்ளைகளே படிக்கக்கூடிய இந்தப் பள்ளியில் உள்ள பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா?